

The Lord Considers
the Lowly

Song 6 சிறுமைப்பட்டவன்மேல் கர்த்தர் சிந்தையாய் இருப்பார்

Psalm 41 (Blessed is the one who considers the poor! The Lord delivers him in the day of trouble; the Lord sustains him on his sickbed; You have healed me)

சிறுமைப்பட்டவன்மேல் கர்த்தர் சிந்தையாய் இருப்பார்
தீங்கு நாளில் கர்த்தர் அவனை விடுவிப்பார்
கர்த்தர் அவனை பாதுகாத்து உயிரோடே வைப்பார்
பூமியில் அவன் பாக்கியவானாய் இருப்பான்

நீ சிறுமைப்பட்டவனோ ?
நீ பெருமைக் கொண்டவனோ?
சிந்தித்து உன்னைத் தாழ்த்தி சிறுமைப்பட்டுவிடு
தியானித்து தேவனைப் போற்றி மகிமைப்படுத்திடு

கர்த்தர் இறங்குவார் உன்னை உயர்த்துவார்
சதா காலத்திற்கும் ஸ்தோத்திரம் செலுத்திடு

படுக்கையின் மேல் வியாதியாய் கிடக்கிற உன்னை
சேனைகளின் கர்த்தத் தம் கையால் தாங்குவார்
உன்னுடைய பலவீனத்தை கர்த்தர் மாற்றுவார்
என் ஆத்துமாவைக் குணமாக்கும் என்று கேட்டிடு

நீ சிறுமைப்பட்டவனோ ?
நீ பெருமைக் கொண்டவனோ?
சிந்தித்து உன்னைத் தாழ்த்தி சிறுமைப்பட்டுவிடு
தியானித்து தேவனைப் போற்றி மகிமைப்படுத்திடு

கர்த்தர் இறங்குவார் உன்னை உயர்த்துவார்
சதா காலத்திற்கும் ஸ்தோத்திரம் செலுத்திடு

தீரா வியாதி உன்னைப் பிடித்துக் கொள்ளும் போதெல்லாம்
கர்த்தாவே நீர் இரங்கி குணமாக்கனும்
பகைஞரெல்லாம் விரோதமாய் எழும்பும் போதெல்லாம்
உத்தமத்திலே தாங்கி ஜெயம் கொடுத்திடனும்

நீ சிறுமைப்பட்டவனோ ?
நீ பெருமைக் கொண்டவனோ?
சிந்தித்து உன்னைத் தாழ்த்தி சிறுமைப்பட்டுவிடு

தியானித்து தேவனைப் போற்றி மகிமைப்படுத்திடு

கர்த்தர் இறங்குவார் உன்னை உயர்த்துவார்
சதா காலத்திற்கும் ஸ்தோத்திரம் செலுத்திடு

நீ எப்பொழுது சாவாய் என்று உம் எதிரி கேட்கிறான்
உன்பேர் எப்பொழுது அழியும் என்று சத்துரு சொல்கிறான்
ஒருவன் உன்னைப் பார்க்க வந்தால் வஞ்ஞனையாய் பேசுகிறான்
கர்த்தாவே நீர் எப்பொழுதும் பிரியமாயிரும்

நீ சிறுமைப்பட்டவனோ ?
நீ பெருமைக் கொண்டவனோ?
சிந்தித்து உன்னைத் தாழ்த்தி சிறுமைப்பட்டுவிடு
தியானித்து தேவனைப் போற்றி மகிமைப்படுத்திடு

கர்த்தர் இறங்குவார் உன்னை உயர்த்துவார்
சதா காலத்திற்கும் ஸ்தோத்திரம் செலுத்திடு

சிறுமைப்பட்டவன்மேல் கர்த்தர் சிந்தையாய் இருப்பார்
தீங்கு நாளில் கர்த்தர் அவனை விடுவிப்பார்
கர்த்தர் அவனை பாதுகாத்து உயிரோடே வைப்பார்
பூமியில் அவன் பாக்கியவானாய் இருப்பான்


The Lord Consists the Lowly